JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.767/2024
PW.3

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மனோ | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | சைலப்பன் | தொழில் | மெடிக்கல் வேலை |
| கிராமம் | கல்யாணிபுரம் | வயது | 22 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கல்யாணிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மெடிக்கலில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் ஆட்டோ ஓட்டுநர். அசா.1 சந்தனமாரி என் அம்மா. அசா.2 தினேஷ் என் தம்பி. சாட்சிள் கருப்பசாமி, முப்பிடாதி ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்து போன சைலப்பன் என் அப்பா. 29.12.2019 ம் தேதி நான் என்னுடைய வீட்டில் இருந்த போது என் தம்பி எனக்கு போன் செய்து அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். பரமகல்யாணி கல்லூரியை தாண்டி சக்தி நகர் அருகே ஆட்டோவில் வரும் போது விபத்து ஏற்பட்டதாக என் தம்பி தினேஷ் எனக்கு தகவல் சொன்னார். நானும், என் அம்மாவும் பரமகல்யாணி மருத்துவமனைக்கு முன்பு சென்று பார்த்தோம். பின்னர் ஆம்புலன்ஸில் என் அப்பாவை அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின் அங்கிருந்து திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் 15 நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி என் அப்பாஇறந்து விட்டார். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.767/2024
PW.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தினேஷ் | தாலுகா | தென்காசி |
| தந்தை பெயர் | சைலப்பன் | தொழில் | கல்லூரி மாணவன் |
| கிராமம் | கல்யாணிபுரம் | வயது | 19 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கல்யாணிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கல்லுரியில் படித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தான் ஆட்டோவை ஓட்டிய நபர். அசா.1 சந்தனமாரி என் அம்மா. சாட்சிள் கருப்பசாமி, முப்பிடாதி ஆகியோர்களை தெரியும். வழக்கில் இறந்து போன சைலப்பன் என் அப்பா. கடந்த 29.12.2019 ம் தேதி நானும், என் அப்பாவும் சங்கரன்கோவிலில் உள்ள கோவிலுக்கு சென்று விட்டு ஆழ்வார்குறிச்சிக்கு மாலை 5.30 மணியளவில் வந்தோம். பின்னர் எங்கள் ஊருக்கு செல்வதற்காக ஆழ்வார்குறிச்சியில் வைத்து எதிரியின் ஆட்டோவில் நானும், என் அப்பாவும் ஏறினோம். ஆட்டோவில் பதிவு எண் TN 76 V3613 ஆகும். ஆட்டோவில் நான், என் அப்பா, முப்பிடாதி மற்றும் சில நபர்கள் ஏறினர்.

பரமகல்யாணி கல்லூரியை தாண்டி சக்தி நகர் அருகே நாங்கள் வந்த ஆட்டோ அதிவேகமாக வந்து வலது புறம் உள்ள மாடு மீது மோதி இடது பக்கத்தில் ஆட்டோ கவிழ்ந்து விட்டது. இடது பக்கத்தில் உட்கார்ந்திருந்த என் அப்பா கீழே விழுந்து ஆட்டோ என் அப்பாவின் மீது விழுந்தது. அதில் என் அப்பாவிற்கு வயிற்றில் ஊமையடியாகவும், முகத்தில் கண் பக்கத்தில் கொஞ்சம் காயமும், எனக்கு வாயின் உள்புறம் காயமும், ஊமையடியும் ஏற்பட்டது. பின்னர் பக்கத்தில் இருந்த நபர்கள் ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னார்கள். நான் என் அம்மாவிற்கு போன் மூலம் தகவல் சொன்னேன். பின்னர் என் அம்மா சம்பவ இடத்திற்கு

வந்தார். நானும், என் அம்மா மற்றும் என் அண்ணன் மூவரும் என் அப்பாவை ஏற்றிக் கொண்டு அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். என் அப்பா சிகிச்சையில் இருந்த போது ஆழ்வார்குறிச்சி காவல்நிலையத்திலிருந்து போலிசார் வந்து என் அப்பாவை விசாரித்து வாக்குமூலம் எழுதி கொண்டார்கள். என் அப்பாவிடம் கையெழுத்து வாங்கினார்கள். அதில் நானும் சாட்சியாக கையொப்பம செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என் அப்பாவின் கையொப்பம் தான்.

புகார் வாக்குமூலம் என் அப்பா கொடுத்தது தான் மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12 நாட்கள் என் அப்பா சிகிச்சையில் இருந்தார். அதன் பிறகுசிகிச்சை பலனின்றி என் அப்பா இறந்து விட்டார். என் அப்பா இறந்ததற்கு ஆஜர் எதிரி ஆட்டோவை அதிவேகமாக ஓட்டியது தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.சிசி.767/2024
PW.1

| பெயர் | சந்தனமாரி | தாலுகா | தென்காசி |
|---|---|---|---|
| கணவர் பெயர் | சைலப்பன் | தொழில் | பேரூராட்சி அலுவலகத்தில் கூலி வேலை |
| கிராமம் | கல்யாணிபுரம் | வயது | 47 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 02.06.2026

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

முதல் விசாரணை:–

நான் தற்போது கல்யாணிபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பேரூராட்சி அலுவலகத்தில் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விபத்து ஏற்படுத்திய பிறகு அவரை தெரியும். சாட்சி தினேஷ் என் மகன். சாட்சிகள் கருப்பசாமி, முப்பிடாதி ஆகியோர்களை தெரியாது. வழக்கில் இறந்து போன சைலப்பன் என் கணவர். கடந்த 29.12.2019ம் தேதி நான் என்னுடைய வீட்டில் இருந்தேன். என் கணவரும், என் மகன் தினேசும் சங்கரன்கோவிலில் உள்ள கோவிலுக்கு சென்று விட்டு ஆட்டோவில் வீட்டுக்கு வரும் போது பரமகல்யாணி கல்லூரிக்கு அருகே விபத்து ஏற்பட்டதாக என் மகன் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். பரமகல்யாணி மருத்துவமனைக்கு முன்பு என் கணவர் கீழே கிடந்தார். உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் என் கணவரை நானும், என் மகன் தினேஷ் மற்றும் மனோ அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைக்க அழைத்து சென்றோம். அங்கு முடியாது என்று சொல்லவும் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு 11 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். பின்பு சிகிச்சை பலனின்றி என் கணவர் இறந்து விட்டார். போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். ஆட்டோவை ஓட்டிய நபர் ஆஜர் எதிரி சைலப்பன் என என் மகன் தினேஷ் என்னிடம் கூறினார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi